# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 15545/F/2024**

திரு.P. குமார் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
வாய்மொழி தேர்வுத் துறை,
பிராட்வே,
சென்னை-600 003. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.P. குமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.S.பரமசிவம், சார்பு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 அவர்கள் ஆஜரானார் இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 20/07/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் வரிசை எண்.15 (41st turn)ல் உள்ள திரு.S.பிரபாகரன் என்பவர், இனசுழற்சி முறையில் (Order of Rotation and turn) GT-BC பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுவதால் அவர் மேற்படி பணியிடத்திற்கான போட்டி தேர்விற்கு விண்ணப்பித்த விண்ணப்பத்தின் (Application) அசலின் சான்றிடப்பட்ட நகலினை தகவலாக வழங்கல் என்பன போன்ற 3 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. எனவே மனுதாரர் தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(1)ன் கீழ் 17.09.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழான 29.11.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து மனுதாரருக்கு தகவல் வழங்கலாமா என்று 27.03.2026 நாளிட்ட கடித எண்.36-4/101/GRID-D1/OTD-B1/2026 மூலம் திரு.S.பிரபாகரன் அவர்களிடம் கோரியுள்ளதாகவும் இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் அனுமதிக்கும் பட்சத்தில் தகவல் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**மனுதாரரின் 20/07/2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ் கோரியுள்ள இனங் களுக்கு சம்மந்தப்பட்ட தனிநபரின் அனுமதி கடிதம் கிடைத்தவுடன் அதற்கான தகவலை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 12.05.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15545/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
வாய்மொழி தேர்வுத் துறை,
பிராட்வே, சென்னை-600 003.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.P.குமார்,
39/A. சீனிவாசா அப்பார்ட்மெண்ட்,
பழைய கோர்ட் கட்டிடம்,
ராஜாஜி காலனி, ஆத்தூர் நகரம்,
சேலம்-636102.

Copy to file: KR/PA